2022

වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

Annual Performance Report



ජාතික කෞතුකාගාර දෙපාර්තමේන්තුව
தேசிய நூதனசாலைகள் திணைக்களம்
Department of National Museums

බුද්ධශාසන, ආගමික හා සංස්කෘතික කටයුතු අමාත්‍යාංශය
புத்தசாசன மத மற்றும் கலாச்சார விவகார அமைச்சு
Ministry of Buddhasasana, Religious and Cultural Affairs

2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

தேசிய நூதனசாலைகள் திணைக்களம்

செலவினத் தலைப்பு இலக்கம் - 208

தேசிய நூதனசாலைகள் திணைக்களம்

கொழும்பு 07

(01). நிறுவனத்தின் குறிக்கோளை செயற்படுத்துவதற்கான சுருக்க விளக்கம்:

1.1. அறிமுகம்:

ஒரு பரிபூரண நூதனசாலைச் சேவையை நாட்டுக்குப் பெற்றுக் கொடுப்பதே தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் முக்கிய நோக்கமாகும். இந் நோக்கத்தினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு செயற்படும் போது, பொதுவாக ஒரு நூதனசாலையுடன் தொடர்புபட்ட பலவித விடய வழிகளிலிருந்தும் மிகப் பொருத்தமான விடயவழியினைத் தேர்ந்தெடுப்பது திணைக்களத்தின் முக்கிய கடமையாகவிருக்கின்றது. இத் தேர்ந்தெடுத்தல் தொடர்பான கொள்கைத் திட்டங்களை ஒழுங்கமைக்கும்போது திணைக்களத்திற்குப் பெற்றுக் கொள்ளக்கூடிய பயன்பாடுகளையும், நாட்டின் தேவைப்பாடுகளையும் கவனத்திற் கொள்ளப்படும்.

தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தினால் இத் திட்டங்கள் தயாரிக்கும் போது, பொதுவாக நாடளாவிய ரீதியில் மிக அதிகமான சேகரிப்புக்களை உள்ளடக்கிய கொழும்பு தேசிய நூதனசாலையினை மையமாகக் கொண்டு தயாரிக்கப்படுகின்றது. இது தவிர, கொழும்பு தேசிய இயற்கையியல் நூதனசாலை, கண்டி தேசிய நூதனசாலை, இரத்தினபுரி தேசிய நூதனசாலை, காலி தேசிய நூதனசாலை, காலி தேசிய சமுத்திர நூதனசாலை, புறக்கோட்டை ஒல்லாந்த நூதனசாலை, அநுராதபுரம் நாட்டார் நூதனசாலை, சுதந்திர ஞாபகார்த்த நூதனசாலை, அம்பாந்தோட்டை மாகம்புர றுஹுணு மரபுரிமை நூதனசாலை மற்றும் பொலொன்னறுவை புராதன தொழில்நுட்ப நூதனசாலை ஆகிய பல நூதனசாலைகள் தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்பட்டு வருவதுடன், அந்த நூதனசாலைகளின் மூலம், அவ்வப் பிரதேசங்களுக்குரிய கலாசார, சுற்றாடல், இயற்கை வளங்கள், மரபுரிமைகள் என்பவை எடுத்துக் காட்டப்படுகின்றன. இது மாத்திரமன்றி, நடமாடும் நூதனசாலைக் கண்காட்சிகள் மற்றும் விரிவுரைகள் போன்ற சேவைகளினாலும் திணைக்களத்தின் செயலாற்றுகைத் திறன் மேலும் பரந்தளவில் இடம்பெற்று வருகின்றது.

1.2. நிறுவனத்தின் தூர நோக்கு மற்றும் நற்பணிகள்:

(அ) நிறுவனத்தின் தூரநோக்கு :

அறிவு மற்றும் இரசனை என்பற்றை உள்ளடக்கிய முழுமையான அர்த்தமுள்ள நூதனசாலைச் சேவையை மக்களுக்கு வழங்குதல்.

(ஆ) நிறுவனத்தின் நற்பணிகள் :

கலாச்சாரம் மற்றும் இயற்கை உரிமை வளங்களை எடுத்துக் காட்டுகின்ற நூதனப் பொருட்கள் மற்றும் மாதிரிகளைக் கையகப்படுத்தல், சேகரித்தல், ஒழுங்குமுறையாக ஆவணப்படுத்தல் மற்றும் அப்பொருட்களை விஞ்ஞான ரீதியாகவும், ஒழுங்குமுறையாகவும் பாதுகாத்தல், அத்துடன் அப்பொருட்கள் தொடர்பான ஆய்வுகள், கற்றல் நோக்கங்கள், இரசனை ஆகிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகப் பயனுள்ள வகையிலும், கவர்ச்சிகரமாகவும் மக்களிடம் முன்வைத்தல்.

1.3. பொறுப்புக்கள் :

- இத்திணைக்களத்தின் பிரிவுகளாகிய தொல்பொருளியல், மனித இனயியல், மானிடவியல், தாவரவியல், விலங்கியல், பூச்சியியல், புவிச்சரிதவியல் ஆகிய பிரிவுகளைச் சார்ந்த பொருட்களையும் மற்றும் அவற்றின் மாதிரிகளையும் சேகரித்தல், ஆவணப் பதிவு செய்தல், பாதுகாத்தல்.

- தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் கீழ் இயங்கி வரும் கொழும்பு தேசிய நூதனசாலை உள்ளிட்ட பதினொரு நூதனசாலைகளில் நிரந்தரமாக அமைக்கப்பட்டுள்ள காட்சிக்கூடங்களை நிகழ்காலப்படுத்தியவாறு நடாத்திச் செல்லல், பாதுகாப்பை உறுதி செய்தல், நாளாந்த பராமரிப்பு மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- பேணிப் பாதுகாக்கப்பட்ட புராதன நூல்கள் மற்றும் ஏட்டுச் சுவடிகள் ஆகியவற்றைக் கொண்டுள்ள தேசிய நூதனசாலை நூலகத்தினால் ஆய்வாளர்களுக்குப் பயனுள்ள வகையிலான ஆய்வுச் சேவைகளை வழங்குதல்.
- மேற் கூறிய துறைகள் சார்ந்த ஆய்வுகளை மேற்கொள்தலும், வெளியிடுதலும்.
- ''ஸ்போலியா செலனிகா'' எனும் தொகுப்பாய்வு நூல், நூதனசாலைச் சேகரிப்புக்களுக்குரிய பெயர்ப்பட்டியல், திணைக்கள வெளியீடுகளாக அச்சிடப்பட்டுள்ள அரியவகை நூல்கள் மற்றும் சஞ்சிகைகள் ஆகியவற்றை மீள அச்சிட்டு வெளியிடல்.
- குறித்த துறைகள் சார்ந்த அறிவை விருத்தி செய்வதற்காக விரிவுரைகள், செயலமர்வுகள், கருத்தரங்குகள் மற்றும் கண்காட்சிகள் அடங்கிய கல்வி நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துதல்.
- பல்கலைக் கழகங்கள், ஏனைய உயர்கல்வி நிறுவனங்களின் போதனாசிரியர்களுக்காக நூதனசாலைக் கல்வி தொடர்பான அறிவை வழங்கும் பொருட்டு வளவாளர்களின் நிறுவனமாகச் செயற்படுதல்.
- சட்ட நடவடிக்கைகளுக்காக விலங்கியல் மாதிரிகளை இனங்கண்டு கொள்வதற்கு உரிய அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.
- வெளி நிறுவனங்களால் நூதனசாலைகளை நிறுவும் நடவடிக்கைகளுக்கு உரிய ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்.
- கவர்ச்சிகரமான நூதனசாலைச் சேவைகளை வழங்குவதன் மூலம் நூதனசாலையைப் பார்வையிடும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தலும், தேசிய வருமானத்தை ஈட்டுவதற்கான பங்களிப்பு வழங்குலும்.

1.4. கட்டமைப்புக் குறிப்பு : (இணைப்பு 01ஐப் பார்க்கவும்)

1.5. திணைக்களத்தின் முக்கிய பிரிவுகள் மற்றும் நூதனசாலைகள் :

தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் முக்கிய பிரிவுகளும், நூதனசாலைகளும் தொடர்பான விபரங்கள் கீழே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

(அ) திணைக்களத்தின் முக்கிய பிரிவுகள் :

- மனித இனயியல் பிரிவு
- மானிடவியல் பிரிவு
- விலங்கியல் பிரிவு
- பூச்சியியல் பிரிவு
- புவிச்சரிதவியல் பிரிவு
- தாவரவியற் பிரிவு
- தேசிய நூதனசாலை நூலகம்
- கல்வி மற்றும் வெளியீடுகள் பிரிவு
- பேணிப் பாதுகாத்தல் பிரிவு
- நிர்வாகப் பிரிவு
- கணக்குகள் பிரிவு
- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

- நிழற்படங்கள் பிரிவு
- கண்காட்சிகள் திட்டமிடல் பிரிவு
- தகவல் தொழில்நுட்பப் பிரிவு

(ஆ) திணைக்களத்தின் கீழ் இயங்கி வரும் நூதனசாலைகள் :

- கொழும்பு தேசிய நூதனசாலை
- கொழும்பு தேசிய இயற்கையியல் நூதனசாலை
- கண்டி தேசிய நூதனசாலை
- இரத்தினபுரி தேசிய நூதனசாலை
- காலி தேசிய நூதனசாலை
- ஒல்லாந்த நூதனசாலை - புறக்கோட்டை
- நாட்டார் நூதனசாலை - அநுராதபுரம்
- தேசிய சமுத்திர நூதனசாலை - காலி
- சுதந்திர ஞாபகார்த்த நூதனசாலை - கொழும்பு
- மாகம்புர றுஹுணு மரபுரிமை நூதனசாலை - அம்பாந்தோட்டை
- புராதன தொழில்நுட்ப நூதனசாலை - பொலொன்னறுவை

(02) முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு :

வெற்றிகள், சவால்கள் மற்றும் இலக்குகள் :

(அ) வெற்றிகள் :

- இலங்கை தேசிய யுனெஸ்கோ ஆணைக்குழுவின் ஒத்துழைப்புடன் கீழ்க்காணும் மிக அரிதான நான்கு நூதனசாலை வெளியீடுகள் மீள அச்சிடப்பட்டுள்ளன.

  (01). Sigiri Graffiti (Vol: II)

  (02).Gazetteer of the a central Province of Ceylon (Vol. 1)

  (03). Gazetteer of the a central Province of Ceylon (Vol. 11)

  (04). Geology of Ceylon

- தேசிய நூதனசாலைகள் திணைக்களத்திற்காக வர்த்தக ரீதியான திட்டமொன்றைத் தயாரித்தல் :

  ஆரம்பம் தொடக்கம் இன்று வரை தேசிய நூதனசாலைகள் திணைக்களத்திற்கானதொரு எவ்வித வர்த்தகத் திட்டத்தினையும் தயாரித்திருக்கவில்லை என்பதுடன், 2022 ஆம் ஆண்டிலேயே குறித்த திட்டம் தயாரிக்கப்பட்டது. ஆறு குழுக்களின் கீழ் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதுடன், இதன் அடிப்படை நோக்கம் என்னவெனில், தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் கீழ் இயங்குகின்ற நூதனசாலைகள் மிகவும் சிறப்பாகவும், மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையிலான நிறுவனங்களாகவும் ஆக்கப்பட்டு, தேசிய பொருளாதாரத்திற்கும், வருமானத்தை ஈட்டிக் கொடுக்கும் திட்டமாகவும் செயற்படுத்தப்படுவதே ஆகும்.

  இந்த வர்த்தகத் திட்டத்தின் பூர்வாங்க நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் கொழும்பு தேசிய நூதனசாலை வளவை மையமாகக் கொண்டு

ஆரம்பிக்கப்பட்டதுடன், அதன் கீழ் பின்வரும் நடவடிக்கைகள் அவ்வளவினுள் மேற்கொள்ளப்பட்டன.

01. சாகித்திய மாதத்தினை முன்னிட்டு 15 நாட்களாக விசேட நூதனசாலை வெளியீடுகள் அடங்கிய விற்பனை நிலையம் நடாத்தப்பட்டது.
02. உலக சைகை மொழித் தினத்தை முன்னிட்டு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.
03. உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.
04. நத்தார் தின விழாக்கள் நடாத்தப்பட்டன.

- தாவரவியற் பிரிவில் தாவரக் கூடங்களைத் தயாரித்தல்
- கண்டி தேசிய நூதனசாலையின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தல்.
- ''இலங்கை நாணயங்கள்'' என்னும் நூலை மீள அச்சிடல்.
- ''ஸ்போலியா செலனிகா - 50 ஆம் தொகுதி'' என்னும் ஆய்வு நூல், ''நூதனசாலைச் சஞ்சிகை - 20 ஆம் தொகுதி'' ஆகியவற்றை அச்சிற்கு வழங்குதல், ''இலங்கையின் கோலம் என்னும் நாட்டார் சம்பிரதாயக்கலை'' என்னும் நூலை மீள அச்சிற்கு வழங்குதல்.
- ''இலங்கையின் நாணயங்கள் மற்றும் நாணயத்தாள்கள்'' பற்றிய நடமாடும் கண்காட்சி நடாத்துதல்.
- தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் தலைமையலுவலகக் கூரை பழுதுபார்த்தல்.

(ஆ) சவால்கள் மற்றும் இலக்குகள் :

- தேசிய நூதனசாலை நூலகத்தில் தீயணைப்புப் பாதுகாப்புத் தொகுதியின் இரண்டாம் கட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்.
- தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் இணையத் தளம் தயாரித்தல்.
- கொழும்பு தேசிய நூதனசாலையின் ஓவியங்கள் கூடத்தின் கூரை பழுதுபார்த்தல்.
- ''ஸ்போலியா செலனிகா - 52 ஆம் தொகுதி'' என்னும் ஆய்வு நூல், ''நூதனசாலைச் சஞ்சிகை - 21 ஆம் தொகுதி'' ஆகியவை அச்சிடப்படல்,
- A Guide to National Museum Colombo என்னும் நூல் மீள அச்சிடப்படல்.
- ஒல்லாந்த நூதனசாலையின் காட்சிக்கூடங்கள் நவீனமயப்படுத்துதல்.
- அரியவகை நூதனசாலை வெளியீடுகளை மீள அச்சிடுதல் திட்டத்தின் கீழ் பின்வரும் வெளியீடுகள் மீள அச்சிடப்படல்.
  (01) இந்தியாவினதும், இலங்கையினதும் கலைகள் மற்றும் கைவினையாற்றல்கள் - ஆனந்த குமாரஸ்வாமி
  (02) நூதனப் பொருட்கள் பேணிப்பாதுகாப்பதற்கான கோட்பாடுகள் - சிறிநிமல் லக்துசிங்ஹ

.....

சனுஜா கஸ்தூரிஆரச்சி

தேசிய நூதனசாலைகள் பணிப்பாளர் நாயகம்

2022 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා
මූල්‍ය කාර්යසාධන ප්‍රකාශය

අයවැය 2022 රු.		සටහන	තත්‍ය 2022 රු.	2021 රු.	
-	**ආදායම් ලැබීම්**		-	-	
-	ආදායම් බදු	1	-	-	
-	දේශීය භාණ්ඩ හා සේවා මත බදු	2	-	-	එස්සිඒ-1
-	ජාත්‍යන්තර වෙළඳාම මත බදු	3	-	-	
-	බදු නොවන ආදායම් හා වෙනත්	4	-	-	
-	**මුළු ආදායම් ලැබීම් (අ)**		-	-	
-	**ආදායම් නොවන ලැබීම්**		-	-	
-	භාණ්ඩාගාර අග්‍රිම		279,595,614	356,631,000	එස්සිඒ-3
-	නැන්පතු		5,920,189	9,866,581	එස්සිඒ-4
10,000,000	අත්තිකාරම් ගිණුම්		13,482,909	11,575,427	එස්සිඒ-5
	වෙනත් ප්‍රධාන ලෙජර් ගිණුම් ලැබීම්		-	-	
10,000,000	**මුළු ආදායම් නොවන ලැබීම් (ආ)**		**298,998,713**	**378,073,008**	
10,000,000	**මුළු ආදායම් ලැබීම් සහ ආදායම් නොවන ලැබීම් ඇ = (අ)+(ආ)**		**298,998,713**	**378,073,008**	
	භාණ්ඩාගාරයට ප්‍රේෂණ (ඇ)			-	
10,000,000	**ශුද්ධ ආදායම් ලැබීම් සහ ආදායම් නොවන ලැබීම් ඉ = (ඇ)-(ඈ)**		**298,998,713**	**378,073,008**	
	අඩු කළා : වියදම්				
	පුනරාවර්තන වියදම්			-	
206,500,000	වැටුප්, වේතන සහ අනෙකුත් සේවක ප්‍රතිලාභ	5	193,962,005	173,300,780	
66,900,000	අනෙකුත් භාණ්ඩ හා සේවා	6	61,818,631	46,975,693	එස්සිඒ-2(ii)
1,600,000	සහනාධාර, ප්‍රදාන සහ මාරුකිරීම්	7	1,482,710	1,341,835	
-	පොළී ගෙවීම්	8	-	-	
-	වෙනත් පුනරාවර්තන වියදම්	9	-		
275,000,000	**මුළු පුනරාවර්තන වියදම් (ඊ)**		**257,263,345**	**221,618,308**	
	මූලධන වියදම්				
85,850,000	මූලධන වත්කම් පුනරුත්ථාපනය හා වැඩිදියුණු කිරීම්	10	35,284,788	56,304,017	
71,700,000	මූලධන වත්කම් අත්පත් කර ගැනීම්	11	24,183,001	78,328,980	
-	ප්‍රාග්ධන මාරුකිරීම්	12	-	-	එස්සිඒ-2(ii)
-	මූල්‍ය වත්කම් අත්පත් කර ගැනීම	13	-	-	
600,000	හැකියා වර්ධනය	14	560,665	394,700	
13,850,000	වෙනත් මූලධන වියදම්	15	11,926,078	18,793,402	
172,000,000	**මුළු මූලධන වියදම් (උ)**		**71,954,532**	**153,821,099**	
	නැන්පතු ගෙවීම්		9,442,779	5,922,816	එස්සිඒ-4
25,000,000	අත්තිකාරම් ගෙවීම්		13,274,341	16,556,766	එස්සිඒ-5
	වෙනත් ප්‍රධාන ලෙජර් ගිණුම් ගෙවීම්		-	-	
25,000,000	**ප්‍රධාන ලෙජර් වියදම් (ඌ)**		**22,717,120**	**22,479,582**	
472,000,000	**මුළු වියදම් එ = (ඊ+උ+ඌ)**		**351,934,997**	**397,918,989**	
(462,000,000)	**දෙසැම්බර් 31 දිනට ශේෂය ඒ = (ඉ-එ)**		(52,936,285)	(19,845,981)	
	අග්‍රිම සැසඳුම් ප්‍රකාශය අනුව ශේෂය		(56,461,554)	(19,845,981)	එස්සිඒ-7
	දෙසැම්බර් 31 දිනට අග්‍රිම ශේෂය		3,525,270	-	එස්සිඒ-3
			(52,936,285)	(19,845,981)	

ஏசீஏ -பீ

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான

நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2022 ரூபா	2021 ரூபா
நிதியல்லாத சொத்துக்கள்			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ 6	11,366,125,118	10,904,428,828
நிதிச் சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ 5/5 ஏ	41,605,888	41,814,456
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ 3	-	-
மொத்தச் சொத்துக்கள்		**11,407,731,006**	**10,946,243,284**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		28,230,825	24,916,802
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		11,366,125,118	10,904,428,828
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ 5பீ		-
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ 4	13,375,063	16,897,654
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ 3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**11,407,731,006**	**10,921,326,482**

பக்க இலக்கம் ..1.... முதல் 5. வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்.'.பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 53 முதல் 86. வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் /
பெயர்:	பெயர்:	பணிப்பாளர்(நிதி).'.ஆணையாளர்(நிதி)
பதவி :	பதவி :	பெயர் :
திகதி : 28/02/2023	திகதி : 24.02.2023	திகதி :

SANUJA KASTHURIARACHCHI
Director General
Department of National Museums
Colombo 07

N.H.W.N. De Alwis
Chief Accountant
Department of National Museums

Somarathne Vidanapathirana
Secretary
Ministry of Buddhasasana, Religious & Cultural Affairs
No. 135, "Dahampaya"
Srimath Anagarika Dharmapala Mw,
Colombo - 07.

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான

காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை	
	2022 ரூபா	2021 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	45,973,210	15,339,316
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	279,595,614	356,631,000
முற்பணங்களை அறவிடல்	13,311,612	12,271,625
வைப்புக்களின் பெறுகை	5,920,189	9,866,581
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**344,800,625**	**394,108,522**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	255,521,136	220,234,913
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	1,482,710	1,341,835
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	23,822,845	2,925,054
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	3,525,270	-
முற்பணக் கொடுப்பனவு	13,772,181	17,243,890
வைப்புக் கொடுப்பனவு	9,442,779	5,922,816
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**307,566,920**	**247,668,509**
தொழிற்படு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**37,233,705**	**146,440,013**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பொளதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)		
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின்	37,233,705	146,440,013
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**37,233,705**	**146,440,013**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)ஸ்ரீ(ஈ)-(உ)	**(37,233,705)**	**(146,440,013)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)		
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்	-	-
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)		
கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:	-	-
உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)		
	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)		
	-	-
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)	-	-
ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-

3.5. நிதிக் கூற்றின் குறிப்புகள் :

3.6. வருமானச் சேகரிப்பின் செயன்முறைகள்

ரூபா. 000

வருமானக் குறியீடு	வருமானக் குறியீட்டு விபரங்கள்	வருமான மதிப்பீடு		வருமானச் சேகரிப்பு	
		ஆரம்ப மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	அளவுகள்	இறுதி வருமான மதிப்பீட்டின் நூற்று வீதம்
20-03-99-00	விற்பனை மற்றும் கட்டணங்கள், ஏனைய பெறுவனவுகள்	20,000,000	20,000,000	34,616,117	173%
20-02-01-01	கட்டிட வாடகைகள்	4,224,000	4,224,000	1,783,581	42%
20-02-02-99	கடன் வட்டிகள்	1, 500, 000	1,500,000	1,677,624	112%

3.7. ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்திய செயன்முறைகள்

ஒதுக்கீட்டு வர்க்கம்	ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள்		உண்மைச் செலவினம்	பயன்படுத்திய நிதி ஒதுக்கீடுகள், பூர்த்தி செய்துள்ள இறுதி நிதி ஒதுக்கீட்டு அளவின் நூற்றுவீதம்
	ஆரம்ப நிதி ஒதுக்கீடு	இறுதி நிதி ஒதுக்கீடு		
மீண்டுவரும் செலவினம்	**241,000,000**	**275,000,000**	**257, 129, 589**	**94%**
01. கருத்திட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்	50,000,000	55,400,000	52, 216, 916	94%
02.அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்				
02. நூதனசாலைக் கல்வி	51,900,000	58,900,000	56, 114, 234	95%
03. நூதனசாலைச் சேவைகள்	139,100,000	160,700,000	148, 798, 439	93%
மூலதனச் செலவினம்	**205,000,000**	**172,000,000**	**71, 954, 532**	**42%**
01. கருத்திட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்	14,000,000	14,000,000	10, 478, 179	75%
02.அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்				
02. நூதனசாலைக் கல்வி	73,100,000	65,100,000	17, 800, 273	27%
03. நூதனசாலைச் சேவைகள்	117,900,000	92,900,000	43, 676, 080	47%
மொத்தம்	**446,000,000**	**447,000,000**	**329, 084, 121**	**74%**

3.8. நி.பி. 208 இன் பிரகாரம், ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் பிரதிநிதி ஒருவராக இத்திணைக்களத்திற்கு / மாவட்ட செயலகத்திற்கு / மாகாண சபைக்கு வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள்

தொடர் இலக்கம்	நிதி ஒதுக்கீட்டைப் பெற்ற அமைச்சு / திணைக்களம்	நிதி ஒதுக்கீட்டின் நோக்கம்	நிதி ஒதுக்கீடுகள்		உண்மைச் செலவினம்	பயன்படுத்திய நிதி ஒதுக்கீடுகள், பூர்த்தி செய்துள்ள இறுதி நிதி ஒதுக்கீட்டு அளவின் நூற்றுவீதம்
			ஆரம்ப நிதி ஒதுக்கீடு	இறுதி நிதி ஒதுக்கீடு		
01	பொது நிர்வாக அமைச்சு	அபிவிருத்தி அலுவலர்களின் சம்பளக் கொடுப்பனவு	2,152,340	20,798,500	19, 869,148	96%

3.9. நிதியல்லாத சொத்துக்கள் பற்றிய அறிக்கைச் செயன்முறைகள்

ரூ. 000

சொத்துக்கள் குறியீடு	குறியீட்டு விபரங்கள்	31.12.2022 ஆம் திகதியன்று பொருட்கள் ஆய்வறிக்கையின் பிரகாரம் மீதி	31.12.2022 ஆம் திகதியன்று நிதி நிலைமை அறிக்கையின் பிரகாரம் மீதி	எதிர்வரும் கணக்கிடலுக்கு நியமித்துள்ள	முன்னேற்றம் நூற்று வீதமாக அறிக்கையிடல்
9151	கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள்	829,686,125.00			
9152	இயந்திரோபகரணங்கள்	113,631,784.67			
9153	காணிகள்	10,396,368,648.71			
9154	புலனாகாத சொத்துக்கள்	-			
9155	உயிரியல் சொத்துக்கள்	-			
9160	நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள்	26,438,559.48			
9180	குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள்	-			

3.10. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

** பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் போது கணக்காய்வாளர் நாயகத்தினால் விநியோகிக்கப்பட்ட இறுதிக் கணக்காய்வு அறிக்கை ஊடுகதிர் (SCAN) செய்யப்பட்டு இங்கு உள்ளடக்கப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல : CAA/B/NM/135/2022/FA உமது இல. திகதி : 2023 மே 09 ஆந் திகதி

பணிப்பாளர் நாயகம்,
தேசிய நூதனசாலைகள் திணைக்களம்.

செலவினத் தலைப்பு 208 - தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைகின்ற வருடத்திற்குரிய நிதிக் கூற்று அறிக்கை தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 11(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்தின் பொழிப்பு அறிக்கை

மேற்குறித்த பொழிப்பு அறிக்கை மற்றும் நிதிக் கூற்று அறிக்கை இத்துடன் அனுப்பி வைக்கப்படுகின்றது.

(ஒப்பம்)
எச்.எம். ரணசிங்ஹ பண்டா
சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் நாயகம்
கணக்காய்வாளர் நாயகம் சார்பாக.

பிரதிகள்:-

1. பணிப்பாளர் நாயகம், அரச கணக்குகள் திணைக்களம் - பொழிப்பு அறிக்கை மற்றும் நிதிக் கூற்று அறிக்கை இத்துடன் அனுப்பி வைக்கப்படுகின்றது.

2. செயலாளர், புத்த சாசன மற்றும் சமய, பண்பாட்டலுவல்கள் அமைச்சு.

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல : CAA/B/NM/135/2022/FA உமது இல. திகதி : 2023 மே 09 ஆந் திகதி

கணக்குக் கொடுக்கும் அலுவலர்,
தேசிய நூதனசாலைகள் திணைக்களம்.

செலவினத் தலைப்பு 208 - தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைகின்ற வருடத்திற்குரிய நிதிக் கூற்று அறிக்கை தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 11(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்தின் பொழிப்பு அறிக்கை

1. நிதிக் கூற்று அறிக்கை

1.1 சூழ்நிலை மதிப்பீட்டின் கருத்துக்கள் :-

செலவினத் தலைப்பு 208 - தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைகின்ற வருடத்திற்குரிய நிதி நிலைமை அறிக்கை, அவ்வருடத்திற்குரிய நிதிச் செயலாற்றுகை அறிக்கை மற்றும் நிதிப் பிரவாகக் கூற்று அறிக்கை ஆகியன அடங்கிய 2022 ஆம் ஆண்டிற்குரிய நிதிக் கூற்று அறிக்கையானது, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம்

இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக வாசிக்கத் தகுந்ததும், இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு யாப்பின் 154(1) ஆம் யாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரமும் எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 11(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம், தேசிய நூதனசாலைகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த நிதிக் கூற்று அறிக்கை தொடர்பான எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புக்கள் யாவும் இவ்வறிக்கையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 11(2) ஆம் உறுப்புரையின் பிரகாரம், வருடாந்த விபரத் திரட்டு முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை, 2023 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆந் திகதி கணக்குக் கொடுக்கும் அலுவலருக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு யாப்பின் 154(6) ஆம் யாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக வாசிக்கத் தகுந்ததும், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 10 ஆம் உறுப்புரையின் பிரகாரம், சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை கூடிய விரைவில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த நிதிக் கூற்று அறிக்கையின் 1.6. ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர்ந்த, ஏனைய விடயங்கள் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று, தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அன்றைய தினத்தில் முடிவடைகின்ற வருடத்திற்குரிய அதன் நிதிச் செயலாற்றுகைகள், நிதிப் பிரவாகம் என்பவை பொதுவான கணக்கியல் கோட்பாடுகளுக்கு அமைவாக உண்மையானதும், நியாயமானதுமான நிலைமையை எடுத்துக் கூறுகின்றதென்பது எனது கருத்தாகும்.

1.2 சூழ்நிலை மதிப்பீட்டின் கருத்துக்களுக்கு அடிப்படையானவை :-

இந்த நிதிக் கூற்று அறிக்கையின் 1.6. ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ள விடயத்தின் அடிப்படையில் எனது கருத்துக்கள் சூழ்நிலை மதிப்பீடு செய்யப்படுகின்றது. இலங்கை கணக்காய்வுகள் தரத்திற்கு அமைவாகவே எனது கணக்காய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நிதிக் கூற்று தொடர்பான எனது பொறுப்புக்கள் பற்றி, கணக்காய்வாளரது பொறுப்புக்கள் என்னும் உறுப்புரையின் கீழ் மேலும் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. எனது கருத்துக்களுக்கு அடிப்படையாக அமைந்த, நான் பெற்றுக் கொண்டுள்ள கணக்காய்வுக்கான சாட்சிகள் போதுமானவையாகவும், உசிதமானவையாகவும் உள்ளதென்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக் கூற்று தொடர்பாக பிரதான கணக்குக் கொடுக்கும் அலுவலரின் மற்றும் கணக்குக் கொடுக்கும் அலுவலரின் பொறுப்புக்கள் :-

பொதுவான கணக்கியல் கோட்பாடுகளுக்கு அமைவாகவும், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 38 ஆம் உறுப்புரையில் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் உண்மையான மற்றும் நியாயமானதான நிலைமையை எடுத்துக் காட்டுகின்றவாறு நிதிக் கூற்று அறிக்கையைத் தயாரித்தல் மற்றும் ஊழல்கள், தவறுகள் காரணமாக உருவாகக்கூடிய பிழையான கூற்றுக்களைத் தவிர்த்து முறையான நிதிக் கூற்று அறிக்கையைத் தயாரித்தல் போன்ற செயல்முறைகளை மேற்கொள்வதற்கு உகந்தவாறான, உள்ளக நிருவாகம் தொடர்பாக உரிய தீர்மானங்களை எடுப்பது, ஒரு கணக்குக் கொடுக்கும் அலுவலரின் முக்கிய பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 16(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம், திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலத்திற்குரிய நிதிக் கூற்று அறிக்கைகளைத் தயாரிப்பதற்கேற்ற வகையில், சொந்த வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆகிய அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் பேரேடுகள் மற்றும் ஆவணங்களை நடாத்திச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 38(1)(இ) ஆம் உறுப்புரையின் பிரகாரம், திணைக்களத்தின் நிதி நிருவாகத்தை நடாத்திச் செல்வதற்கு உகந்த மற்றும் விளைதிறன் கொண்ட உள்ளக நிருவாகத் தொகுதி நடைமுறையிலுள்ளதென்பதை கணக்குக் கொடுக்கும் அலுவலர் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டுமென்பதுடன், அந்த நிருவாகத் தொகுதியின் விளைதிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்து, அதற்கேற்ப நிருவாகத் தொகுதியை விளைதிறன் கொண்டதாக அமைப்பதற்குரிய மாற்றங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்று கணக்காய்வுகள் தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் :-

ஒரு நிதிக் கூற்று அறிக்கையை ஒட்டுமொத்தமாக, ஊழல்கள், தவறுகள் காரணமாக உருவாகக்கூடிய பிழையான கூற்றுக்களைத் தவிர்த்து முறையான நிதிக் கூற்று அறிக்கையாகத் தயாரித்தலும், அவ்வறிக்கை நியாயமானதென உறுதிப்படுத்துதலும் அத்துடன், எனது கருத்துக்களை உள்ளடக்கிய கணக்காய்வு அறிக்கையைச் சமர்ப்பித்தலும் எனது முக்கிய நோக்கமாகும். நியாயமான

உறுதிப்படுத்தலென்பது ஒரு உயர்மட்ட உறுதிப்படுத்தலாக அமையுமெனக் கருதப்பட்ட போதிலும், இலங்கையின் கணக்காய்வுத் தரத்திற்கு உரியவாறு கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுகின்ற போது, அவை யாவும் மிகத் துல்லியமாக விடயங்களை வெளிப்படுத்துகின்ற அறிக்கையென உறுதிப்படுத்த முடியாது. ஊழல்கள் மற்றும் தவறுகள் என்பன தனிமனிதனாகவோ அல்லது குழுவாகவோ ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் விளைவாக பிழையான கூற்றுக்கள் வெளியாகலாமென்பதுடன், குறித்த அறிக்கைகளிலுள்ள பிழையான கூற்றுக்களின் அளவானது, நிதிக் கூற்று அறிக்கைகளைப் பரிசீலிக்கும் பரிசீலனையாளர்களால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்களின் அடிப்படையில் எழுகின்ற தாக்கங்கள் மீது தங்கியுள்ளது.

இலங்கையின் கணக்காய்வுத் தரத்திற்கு உரியவாறு கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அதன் ஒரு பகுதியாக, தொழில் ரீதியான தீர்ப்புகளை வழங்குவதும் மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வுக் கருத்துக்களுக்கு உரிய அடிப்படைக் காரணங்களை ஆராயுமிடத்து, ஊழல்கள், தவறுகள் காரணமாக உருவாகக்கூடிய பிழையான கூற்றுக்கள் அடங்கிய நிதிக் கூற்று அறிக்கையின் ஆபத்துக்களை இனங்கண்டு கொள்வதும், அவற்றை மதிப்பீடு செய்வதும், சந்தர்ப்பத்திற்கேற்ப வகையிலான கணக்காய்வுச் செயன்முறைகளைப் பிரயோகித்தும் குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பிழையான கூற்றுக்கள் காரணமாக, தவறான அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் மூலம் ஏற்படக்கூடிய தாக்கங்களை விடவும், ஊழற் செயற்பாடுகள் மூலம் ஏற்படக்கூடிய தாக்கங்கள் பயங்கரமானதாக அமையலாம். ஏனெனில் அவை துஷ்ட கூட்டத்தினரால், போலியான ஆவணங்களைத் தயாரித்தலினால், வேண்டுமென்றே மேற்கொள்கின்ற தவறவிடுகைகளால் பிழையான கூற்றுக்களைத் தெரிவித்தலும், மற்றும் உள்ளக நிருவாகத்தின் முறைகேடுகள் காரணமாகவும் மேற்கொள்ளப்படுகின்றன.

- உள்ளக நிருவாகத்தின் விளைதிறன் தொடர்பான கருத்தினை முன்வைப்பதற்காக மட்டுமன்றி, சந்தர்ப்பத்திற்கேற்ப வகையிலான கணக்காய்வுச் செயன்முறைகளைத் திட்டமிடுவதற்காகவும் உள்ளக நிருவாகம் தொடர்பான தெளிவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

- வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக் கூற்று அறிக்கையின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்கள் என்பவற்றிற்கு அடிப்படையாக அமைந்திருந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் போன்றவை உரிய வகையிலும், நியாயமானதாகவும் அறிக்கையில் உட்சேர்க்கப்பட்டிருத்தலை மதிப்பிடுதல்.

- நிதிக் கூற்று அறிக்கையின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்கள் என்பவற்றிற்கு அடிப்படையாக அமைந்திருந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் போன்றவை உரிய வகையிலும், நியாயமானதாகவும் அறிக்கையில் உட்சேர்க்கப்பட்டிருத்தலும், வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக் கூற்று அறிக்கை சமர்ப்பித்தல் தொடர்பாகவும் மதிப்பிடப்பட்டுள்ளன.

எனது கணக்காய்வுகளில் இனங்காணப்பட்டுள்ள மிக முக்கிய கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக நிருவாகத்தின் குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்குக் கொடுக்கும் அலுவலருக்கு என்னால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1.5. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை :-

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் உறுப்புரையின் பிரகாரம், பின்வரும் விடயங்களை முன்வைக்கின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) கடந்த வருடத்திற்குரிய நிதிக் கூற்று தொடர்பாக என்னால் வழங்கப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

1.6. நிதிக் கூற்று அறிக்கை தொடர்பான கருத்துக்கள் :-

1.6.1. நிதியல்லாத சொத்துக்கள் :-

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) திணைக்களத்தின் நிதிக் கூற்று அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள நிதியல்லாத சொத்துக்களுள் காணி மற்றும் கட்டிடங்கள் என்பன முறையே 10,002,369,340 ரூபா மற்றும் 800,000,000 ரூபா என 2013 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையின் பிரகாரம் கணக்கிடப்பட்டுள்ளது. இச்சொத்துக்களின் ஆகுசெலவு மதிப்பிடப்பட்டு தற்போது 09 வருடங்கள் கடந்து விட்ட போதும், அரச நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதிகளை மதிப்பீடு செய்வதற்கான 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதிய மற்றும் 04/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்று நிருபத்தின் வழிகாட்டல்களுக்கமைவாக, குறித்த சொத்துக்களின் பெறுமதிகளை மீள் கணக்கீடு செய்து சரியான பெறுமதிகளை கணக்கில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) இத்திணைக்களத்திற்குரிய ஏனைய பிரதேச மட்ட நூதனசாலைகளாகிய பொலொன்னறுவை புராதன தொழில்நுட்ப நூதனசாலை மற்றும் மாகம்புர றுஹுணு நூதனசாலை ஆகியவற்றின் காணிக் கையகப்படுத்தல் நடவடிக்கைகள் கணக்காய்வுத் தினத்திற்கு முன்னர் பூர்த்தி செய்யபட்டிருந்த போதும், ஒல்லாந்தர் நூதனசாலையின் காணிக் கையகப்படுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. பொதுவாக ஏற்றுக் கொள்ளக்கூடிய கணக்கியல் கோட்பாடுகளுக்கமைவாக, காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு அதன் பிரகாரம் கணக்கீடுகள் உட்சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வுகள் :-

2.1. பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கணக்கீடு :-

திணைக்களத்தினால் கணக்கீடு செய்யப்பட்ட 2022 ஆம் ஆண்டில் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பாக நோக்குமிடத்து, நிதிப் பிரமாணங்கள் 94 இன் பிரகாரம், மீளாய்வு வருடத்திற்குரிய நிதி ஒதுக்கீடுகளின் மீதியை மிஞ்சுகின்ற வகையில், சேர்க்கப்பட்ட பெறுமதி 3,461,712 ரூபாவாக பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கணக்கீட்டின் போது காணப்பட்டது.

2.2. கணக்குக் கொடுக்கும் அலுவலரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள் :-

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுகள் சட்டத்தின் 38 ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், கணக்குக் கொடுக்கும் அலுவலரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

திணைக்களத்தின் நிதி நிருவாகத்தை நடாத்திச் செல்வதற்கு உகந்த மற்றும் விளைதிறன் கொண்ட உள்ளக நிருவாகத் தொகுதி நடைமுறையிலுள்ளதென்பதை பிரதான கணக்குக் கொடுக்கும் அலுவலர் மற்றும் கணக்குக் கொடுக்கும் அலுவலர் ஆகியோரால் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டுமென்பதுடன், அந்த நிருவாகத் தொகுதியின் விளைதிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்து, அதற்கேற்ப நிருவாகத் தொகுதியை விளைதிறன் கொண்டதாக அமைப்பதற்குரிய மாற்றங்களை மேற்கொள்ளல் வேண்டுமென்பதுடன், குறித்த மீளாய்வுகள் எழுத்து மூலம் தயாரிக்கப்பட்டு, அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதும், அவ்வாறான மீளாய்வு அறிக்கைகள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை.

2.3. சட்ட திட்டங்கள் மற்றும் நிபந்தனைகளை அனுசரிக்காதிருந்தமை :-

மாதிரிக் கணக்காய்வுப் பரிசீலனைகளின் போது, சட்ட திட்டங்கள் மற்றும் நிபந்தனைகளின் ஏற்பாடுகளை அனுசரிக்காதிருந்த பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

சட்ட திட்டங்கள் மற்றும் நிபந்தனைகள்	அனுசரிக்காமை
2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்று நிருபத்தின் 3.1. ஆம் பந்தி	திணைக்களத்திற்குரிய 05 மோட்டார் வாகனங்களின் எரிபொருள் தீர்வு தொடர்பாக 2019 ஆம் ஆண்டின் பின்னர் பரிசீலனை செய்யப்படவில்லை.

2.4. முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் :-

திணைக்களத்தினால் கடந்த 2011 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ஆந் திகதி தொடக்கம் 2021 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31 ஆந் திகதி வரையான பத்து வருட காலப்பகுதிக்கு குத்தகை அடிப்படையில் கட்டிடமொன்றை கைவினைக் கைத்தொழில் சபைக்குக் கொடுத்திருந்தது. குறித்த கட்டிடத்திற்கான வரிப்பணக் கட்டணங்கள், நீர்க் கட்டணங்கள் போன்ற செலவுகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆந் திகதியன்று திணைக்களத்தினால் அறவிடப்பட வேண்டிய குத்தகைப் பண நிலுவைத் தொகைகள், பெறுமதி மதிப்பீட்டின்படி 109,853,607 ரூபாவாக இருந்தது. 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆந் திகதியன்று கைவினைக் கைத்தொழில் சபை குறித்த கட்டிடத்திலிருந்து விலகிச் சென்றிருந்ததுடன், கட்டிடம் பொறியிடப்பட்டு மூடப்பட்டது. எவ்வாறாயினும், மதிப்பீடு செய்யப்பட்டவாறு குறித்த நிலுவைகள் அறவிடப்படாதிருந்ததுடன், திணைக்களத்திற்கு ஏற்பட்ட நஷ்டம் 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று 109,853,607 ரூபாவெனக் கணக்கிடப்பட்டது.

3. நடவடிக்கைச் செயற்பாடுகளின் மீளாய்வு

3.1. செயலாற்றுகைகள் :-

3.1.1. நோக்கு மற்றும் நற்பணிகள் :-

தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற நூதனப் பொருட்களின் சேகரிப்பு முகாமைத்துவக் கொள்கைப் பிரகடனத்தை வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை மேற்கொள்ளாதிருந்தது. அத்துடன் இலங்கையிலுள்ள அனைத்து நூதனசாலைத் தொகுதிகளையும் நடாத்திச் செல்வதற்கான அதிகார பூர்வ முழுஅதிகாரத்தையும் நூதனசாலைகள் திணைக்களம் வசம் பெற்றுக் கொள்ளும் வகையில் சட்ட ரீதியான திருத்தங்களை மேற்கொண்டு, நூதனசாலைகள் துறையின் அதிகாரத்தைப் பெறுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. இவ்விடயம் தொடர்பாக பணிப்பாளர் நாயகம் பின்வருமாறு பதிலளித்திருந்தார்.

"தனது தற்றுணிபின்படி, நூதனப் பொருட்களின் சேகரிப்புக்கள் தொடர்பாகவும், நூதனசாலைகளை நடாத்திச் செல்வதற்காகவும், ஒரு தனிநபருக்கோ அல்லது நிறுவனத்திற்கோ எவ்வித சட்டத் தடைகளும் கிடையாது. அவ்வாறான நூதனசாலைகளை நிருவகிப்பதற்கு நூதனசாலைகள் திணைக்களத்திற்கு நடைமுறைச் சாத்தியங்கள் எதுவுமில்லை" என்பதாகும். எனினும் குறித்த நூதனப் பொருட்களின் சேகரிப்பினைப் பெற்றுக் கொண்டிருந்த மூலவளங்கள் தொடர்பாக விளக்கமளிப்பதற்கு கடப்பாடுடையவர்களாக இருப்பதும், தேசிய நூதனசாலைகள் திணைக்களத்திற்கு குறித்த செயன்முறைகளைத் தயாரிப்பதற்கான அவசியம் உள்ளதென்பதும் தெளிவாகியது.

3.1.2. கருத்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் :-

கொழும்பு தேசிய நூதனசாலைகள் திணைக்கள நூலகத்திற்கான, தீயணைப்புத் தொகுதியொன்றை நிறுவுவதற்காக 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆந் திகதியன்று, ஆகுசெலவாகக் கணக்கிடப்பட்ட 98,550,000 ரூபா தொகையை மதிப்பீடு செய்து, குறித்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி பூர்த்தி செய்யப்படவிருந்தது. எனினும் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று, குறித்த கருத்திட்டத்தின் பௌதீக செயலாற்றுகைகளின் அளவு சுமார் 35 சதவீதமாக மாத்திரமே காணப்பட்டது. அன்றைய தினம் வரையான நிதிச் செலவினங்கள் 28,579,655 ரூபாவாக இருந்தது. 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 04 ஆந் திகதி வரையான காலப்பகுதி வரை குறித்த கருத்திட்டம் பூர்த்தி செய்யப்படவில்லை.

3.2. பெறுகைகள் :-

அரச பெறுகை நடவடிக்கைகள் யாவற்றையும் இலத்திரனியல் பெறுகை செயன்முறையின் பிரகாரம் தயாரிக்குமாறு ஆலோசனைகளை வழங்கியிருந்த நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் PED/e-GP/Circular/2018 ஆம் இலக்க மற்றும் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆந் திகதிய சுற்று நிருபம் மற்றும் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் PED/e-GP/Circular/2018 ஆம் இலக்க மற்றும் 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23 ஆந் திகதிய சுற்று நிருபம் ஆகியவற்றின் பிரகாரம், இத்திணைக்களம் செயற்படவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டுள்ளது.

3.3. சொத்துக்களின் முகாமைத்துவம் :-

கீழ்க் காணும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் கேட்போர்கூடம் வெகுகாலமாக நாளாந்த பாவனைக்காக ஈடுபடுத்தாதிருந்தமையால், செயலிழந்த நிலைமையில் இருப்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) நூதனசாலையின் இயற்கையியல் பிரிவில் உள்ள உயிரியல் காட்சிக் கூடத்தின் அருகே இரண்டாம் மாடியில் இடப்பக்கமாக அமைந்துள்ள பகுதி முழுமையாக பயன்படுத்தப்படாமல் மூடப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு தொடக்கம் இப்பகுதி பொதுமக்கள் பார்வைக்காகத் திறக்கப்படவில்லை. இப்பகுதி உரியவாறு பழுதுபார்க்கப்பட்டு உடனடியாக பொதுமக்கள் பார்வைக்காகத் தயார்படுத்துதல் அல்லது செயலிழந்த இப்பகுதியைப் பயன்தரக்கூடிய வகையில் பிறிதொரு நடவடிக்கைக்காகப் பயன்படுத்துதல் போன்ற தேவைப்பாடுகள் அவதானிக்கப்பட்டன.

3.4. முகாமைத்துவக் குறைபாடுகள் :-

கீழ்க் காணும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07 ஆந் திகதி மரணமடைந்த நெதுன்கமுவே விஜயராஜா என்னும் யானையின் உடல் பேணிப் பாதுகாக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை திணைக்களம் மேற்கொண்டிருந்தது. அவ்வுடலின் தோல் பதனிடப்படுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை கண்டி ஸ்ரீ தலதா மாளிகையினால் 375,530 ரூபா தொகையும், திணைக்களத்தினால் 284,833 ரூபா தொகையும் செலவிடப்பட்டிருந்த போதும், திணைக்களத்தின் இத்திட்டத்திற்குரிய செலவுக்காக 1,182,453 ரூபாவை கண்டி ஸ்ரீ தலதா மாளிகை வழங்கியிருந்தது. 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆந் திகதி யானையின் இறந்த உடலில் உள்ள தோலை அகற்றி வனஜீவராசிகள் திணைக்களத்தின் அதிஉயர் குளிரூட்டியில் பேணிப் பாதுகாத்து வைப்பதற்காக அனுப்பி வைக்கப்படுவதற்கும், யானையின் உடலை வைப்பதற்கான நிரந்தர இடமொன்றை உடனடியாகத் தேர்ந்தெடுப்பதற்காகவும் மேற்கொள்ளப்பட நடவடிக்கைகள் தாமதமாக்கப்பட்டமை காரணமாக யானைத் தோலின் தரம் குன்றிவிடும் அபாயம் காணப்பட்டது.

(ஆ) திணைக்களத்தின் புவிச்சரிதவியல் பிரிவிற்குரிய 272 மாணிக்கக் கற்கள் இலங்கை வங்கியின் மெட்ரோபொலிட்டன் கிளையில் 1964 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18 ஆந் திகதி தொடக்கம் வைக்கப்பட்டிருந்தது. 1993 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது, அவற்றுள் ஒரு மாணிக்கக் கல் போலியானதெனக் கண்டறியப்பட்டதுடன், அக்கல் புவிச்சரிதவியல் பிரிவில் வைக்கப்பட்டது. தேசிய மாணிக்கக்கற்கள் மற்றும் தங்க ஆபரணங்கள் அதிகார சபையின் இரத்தினக்கல் நிபுணர் ஒருவரின் ஒத்துழைப்புடன் எஞ்சியிருக்கும் 271 மாணிக்கக் கற்களினதும் தற்போதைய பெறுமதியைக் கணக்கிட்டு மதிப்பீடுகள் செய்யப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

4. மனித வளங்கள் முகாமைத்துவம் :-

4.1. ஈடுபடுத்த வேண்டிய பணிக்குழு மற்றும் உண்மையின்படி பணிக்குழு :-

கீழ்க் காணும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று, அங்கீகரிக்கப்பட்ட பணிக்குழுவினரின் எண்ணிக்கை 566 ஆக இருந்ததுடன், உண்மையின்படியான பணிக்குழுவினரின் எண்ணிக்கை 361 ஆக இருந்தமையால், அன்றைய தினத்தன்று 203 வெற்றிடங்கள் காணப்பட்டன. இவ்வெற்றிடங்களுள் நிறைவேற்றுத் தரத்திலான 16 பதவிகளில் 06 வெற்றிடங்களும், மூன்றாம் நிலையிலான 05 பதவிகளில் 04 வெற்றிடங்களும், இரண்டாம் நிலையிலான பதவிகளில் 103 வெற்றிடங்களும், ஆரம்ப நிலையிலான பதவிகளில் 90 வெற்றிடங்களும் காணப்பட்டன. இவ்வாறான ஊழியர் குறைபாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு மீளாய்வு வருடத்தினுள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) இவ்வெற்றிடங்களுக்குள் உள்ளடங்குகின்ற MN-4 தரத்திலான பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவி திணைக்களத்திற்குரிய பதவியாக இருப்பதுடன், அப்பதவி கடந்த பத்து வருட காலமாக வெற்றிடமாக உள்ளது. இப்பதவி மிகவும் பொறுப்பு வாய்ந்த பதவியாக உள்ளமையால், இவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக பொது நிருவாக அமைச்சின் எழுத்து மூல அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காகக் கோரிக்கை விடுக்கப்பட்டு, அது நிறைவேறாத பட்சத்தில் தொடர்ந்தும் அவ்வெற்றிடம் பூர்த்தி செய்யப்படாமல் இருந்து வருகின்றது.

(இ) தேசிய நூதனசாலையின் நூதனப் பொருட்களின் சேகரிப்பு தொடர்பாக பொதுமக்களைத் தெளிவூட்டுவதற்காக போதுமான அளவு பயிற்சி பெற்ற அலுவலர்கள் இல்லாமை மற்றும், பூச்சியியல் பிரிவு, விலங்கியல் பிரிவு, தாவரவியற் பிரிவு மற்றும் புவிச்சரிதவியல் பிரிவு போன்ற இயற்கையுடன் தொடர்புடைய பிரிவுகளில் ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்கென ஈடுபடுத்தப்படுகின்ற நூதனப் பொருட்களின் சேகரிப்புக்களைப் பராமரித்தல், ஆவணப்படுத்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் புதிய பொருட்களைச் சேகரித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் போதிய அளவில்

ஊழியர்களை நியமிக்காதிருந்தமை போன்ற காரணங்களின் நிமித்தம் குறித்த பிரிவுகளின் செயலாற்றல்கள் மிகவும் பாரதூரமான வகையில் பாதிக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

(ஒப்பம்)
எச்.எம். ரணசிங்ஹ பண்டா
சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் நாயகம்
கணக்காய்வாளர் நாயகம் சார்பாக.

(04). செயலாற்றுகை அறிக்கைச் சுட்டுகள் :

4.1. நிறுவனத்தின் செயலாற்றுகை அறிக்கைச் சுட்டுகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்) :

விசேடமான சுட்டுகள்	எதிர்பார்க்கப்பட்ட நிறைவின் நூற்று வீதமாக உண்மையான நிறைவு		
	100% - 90%	75% - 89%	50% -74%
நூதனப் பொருட்கள் மற்றும் மாதிரிகள் என்பவற்றின் பேணிப்பாதுகாத்தல் நடவடிக்கைகள்	100%		
கையகப்படுத்தல் மற்றும் ஆவணப்படுத்தல்	100%		
நிகழ்காலப்படுத்துதல்	100%		
மாதிரிகளின் கணக்கெடுப்பு			27.80%

(05) நிலையான அபிவிருத்தி நோக்கங்களைப் பூர்த்தி செய்வதற்கான செயன்முறை :

5.1. இனங்காணப்பட்டுள்ள நிலையான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகளைப் பூர்த்தி செய்வதன் வெற்றிகளும், சவால்களும் :

இலக்குகள் / நோக்கங்கள்	இலக்கு	வெற்றிக் சுட்டுகள்	இதுவரை பெற்றுள்ள வெற்றிகளின் நூற்றுவீதம்

			0%-49%	50%-74%	75% - 100%
16. அனைத்து மட்டத்திலும் பயனுள்ள வகையிலான பூரணமானதொரு நிறுவனமாகக் கட்டியெழுப்புதல். (SGD 16)	16.1 தனித்துவம் வாய்ந்த பொருட்களின் சேகரிப்புக்கான நூதனப் பொருட்களின் மாதிரிகள் சேகரிப்பினை உறுதிப்படுத்துதல்.	**மனித இனயியல் பிரிவு** ❖ கையகப்படுத்திய பொருட்கள் • A Knife with Sheath – 2022.03.04 • Three Ola Leaves Manuscripts – 2022.04.29 **விலங்கியல் பிரிவு** ❖ பேணிப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக நெதுன்கமுவ விஜயராஜா என்னும் யானையின் சரீரத்தைப் பெற்றுக் கொள்ளல். ❖ காலி நீதவான் நீதிமன்றத்தின் வழக்கிற்காக 09207/20(B3587/20) ஆம் இலக்க வழக்கிற்கு அவசியமான பொருட்களை கையகப்படுத்துதல். (இரண்டு வலம்புரிச் சங்குகள்) ❖ Marine Sponge Microscopi Slides 2022.01.01 NH – 2022.01.35 NH ❖ Python Molurus 2022.02.01 NH ❖ Lycodon Striotus Sinhaleyus 2022.03.01 NH **தாவரவியற் பிரிவு** ❖ இரத்தினபுரி தேசிய நூதனசாலைப் பூங்காவில் மேற்கொள்ளப்பட்ட களநிலை ஆய்வின் போது சேகரிக்கப்பட்ட 57 மாதிரிகள். **புவிச்சரிதவியல் பிரிவு** ❖ புவிச்சரிதவியல் பிரிவிலுள்ள மாதிரிகளின் சேகரிப்பு கீழ்க்கண்டவாறு வகுக்கப்படுதல் மற்றும் குறித்த மாதிரிகளுக்கான பதிவு இலக்கங்களைத் தயாரித்தல் என்பவற்றில் சிக்கலான நிலைமை தோன்றியதால் இலக்கமிடப்படும் புதிய முறையொன்றைத் தயாரித்தல். **1. மாணிக்கக் கல் சேகரிப்பு** **2. கனிமங்கள் சேகரிப்பு**			100% 100% 100% 100% 100% 100% 100% 100% 100%

		• அரிதான கனிமங்கள் சேகரிப்பு • சாதாரண கனிமங்கள் சேகரிப்பு **3. பாறைகள் சேகரிப்பு** **4. புதைபடிமங்கள் சேகரிப்பு** • ஜுராசிக் புதைபடிமங்கள் சேகரிப்பு • மயோசீன் புதைபடிமங்கள் சேகரிப்பு • பிளைஸ்டோசீன் புதைபடிமங்கள் சேகரிப்பு • ஹொலோசீன் புதைபடிமங்கள் சேகரிப்பு • வெளிநாட்டுப் புதைபடிமங்கள் சேகரிப்பு **5. மூலவரலாற்றுக் கால எச்சங்கள் சேகரிப்பு** ❖ புவிச்சரிதவியல் பிரிவிலுள்ள பிளைஸ்டோசீன் புதைபடிமங்கள் சேகரிப்பில் 06 வனவிலங்குப் பிரிவிற்குரிய 305 மாதிரிகளின் பேணிப் பாதுகாத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. ❖ பிளைஸ்டோசீன் புதைபடிமங்கள் சேகரிப்பில் உள்ள மாதிரிகளுக்குரிய தகவல்களை நிகழ்காலப்படுத்துதல். **<u>கொழும்பு தேசிய நூதனசாலை</u>** ❖ யானைத் தந்தத்தினாலான 04 புனிதர்களின் சிலைகள் மற்றும் 02 கன்னியர்களின் சிலைகள் என்பவற்றை கண்டிய காலகட்டத்துக் காட்சிக்கூடத்தில் காட்சிப்படுத்துவதற்காகத் தயார் செய்தல்.			76%
	16.2. உள்ளக நிலைமையின் பிரகாரம் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டிய நூதனப் பொருட்கள், மாதிரிகளின் சேகரிப்புக்கள் என்பவற்றைப் பராமரித்தல்.	**<u>மானிடவியல் பிரிவு</u>** ❖ மானிடவியல் பிரிவிலுள்ள 28 நூதனப் பொருட்களின் பேணிப் பாதுகாத்தல்கள் மேற்கொள்ளப்படல். **<u>தாவரவியற் பிரிவு</u>** ❖ இரத்தினபுரி தேசிய நூதனசாலைப் பூங்காவில் மேற்கொள்ளப்பட்ட களநிலை ஆய்வின் போது சேகரிக்கப்பட்ட 57 உலர் இலை மாதிரிகள் பேணிப்பாதுகாக்கப்பட்டு தாவரக் கூடங்களில் வைக்கப்பட்டமை. **<u>விலங்கியல் பிரிவு</u>**		70%	100% 100%

100%

		❖ முலையூட்டி விலங்குகள் சேகரிப்பிலுள்ள விலங்குகளின் நவீன விஞ்ஞானப் பெயர்கள் நிகழ்காலப்படுத்தப்படுதல். (1378 விலங்கு மாதிரிகள்) ❖ நெதுன்கமுவ விஜயராஜா யானையின் தோல் பேணிப்பாதுகாக்கப்படல். ❖ நெதுன்கமுவ விஜயராஜா யானையின் மண்டையோட்டிலும், இரண்டு தந்தங்களிலும் உள்ள சதைப்பகுதி அகற்றப்பட்டு பேணிப்பாதுகாத்தல். ❖ கடற்சிப்பிகளின் ஓடுகள் சேகரிப்பினைப் பேணிப் பாதுகாத்தல். ❖ Holo Type, Para Type என்னும் சேகரிப்பில் உள்ளவற்றை நிகழ்காலப்படுத்தியவாறு பேணிப் பாதுகாத்தல். **<u>புவிச்சரிதவியல் பிரிவு</u>** ❖ புவிச்சரிதவியல் பிரிவில் உள்ள பிளைஸ்டோசீன் புதைபடிமங்கள் சேகரிப்பில் 06 வகையான வனவிலங்குகளின் 305 மாதிரிகள் பேணிப்பாதுகாக்கப்பட்டமை ❖ பிளைஸ்டோசீன் புதைபடிமங்கள் சேகரிப்பின் மாதிரிகளுக்குரிய தகவல்கள் நிகழ்காலப் படுத்தப்பட்டமை **<u>பேணிப்பாதுகாத்தல் பிரிவு</u>** பேணிப் பாதுகாத்தல் பிரிவினால் இவ்வருடத்தினுள் கீழ்க்காணும் பிரிவுகளுக்கும் நூதனசாலைகளுக்கும் உரிய நூதனப் பொருட்களின் பேணிப்பாதுகாத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (i) நூலகம் ❖ 27 ஏட்டுச் சுவடிகள் பேணிப் பாதுகாக்கப்பட்டமை. ❖ Ceylon government gazette எனப்படும் வர்த்தமானிப் பத்திரிகை பேணிப் பாதுகாக்கப்பட்டமை ❖ ஆவணங்கள் மற்றும் ஓவியக் கண்காட்சிக்காக 05 புராதன ஓவியங்கள் பேணிப் பாதுகாக்கப்பட்டமை (ii) கொழும்பு தேசிய நூதனசாலை			100% 100%

		❖ 33 துட்டு நாணயங்கள், 10 அரேபிய நாணயங்கள், 24 மொகம்மதிய நாணயங்கள் என்பவற்றைப் பேணிப் பாதுகாத்தல். ❖ 15 யானைத் தந்த சீப்புக்கள் பேணிப் பாதுகாக்கப்பட்டமை. ❖ 01 பின்னல் ஊசி பேணிப்பாதுகாக்கப்பட்டமை ❖ 03 மூக்குக் கண்ணாடி உறைகள் பேணிப் பாதுகாக்கப்பட்டமை. ❖ உறையுடனான 01 கஸ்தான வாள் பேணிப் பாதுகாக்கப்பட்டமை ❖ ஒரு ஐரோப்பிய துப்பாக்கி பேணிப் பாதுகாக்கப்பட்டமை			
